# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பியூலா எஸ்தர் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused absent.Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated.26.06.2025**

**முதல் விசாரணை**

நான் திருமணமேடு புதுத்தெருவில் வசித்து வந்து சமயபுரம் டோல்பிளா அருகில் உள்ள தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவக் கல்லூரியில் ANM Nurse ஆக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் என்னுடைய கணவர் ஆவார். கடந்த 01.06.2023 ம் தேதி எனது கணவர் வேலைக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் என்னை அழைத்துக் கொண்டு சமயபுரம் டோல்பிளாவில் உள்ள தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவக் கல்லூரியில் விட்டுவிட்டு வந்துவிட்டார். எனது கணவரின் நண்பர் சாட்சி ராஜா என்பவர் எனக்கு போன் செய்து தான் வேலைக்கு செல்வதற்காக வளவனூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது காலை 08.30 மணியளவில் எனது கணவர் டோல்கேட்–இலால்குடி செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வாளாடி பத்மாவதி பேலஸ் திருமண

மண்டபம் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது எதிர் திசையில் வந்த அம்மன் தனியார் பேருந்தானது அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் எனக்கு தகவல் சொன்னார். சம்பவம் நடைபெறும் போது நான் மருத்துவமனையில் இருந்தேன். சம்பவம் கேள்விபட்டு இலால்குடி அரசு மருத்துவமனை சென்று எனது கணவரை பார்த்தபோது அவருக்கு தலை, கண், வாய், மார்பகம், கால் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டு இறந்திருந்தார். அதன்பிறகு நான் இலால்குடி காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரானது அ.சா.ஆ.1 ஆகும். விபத்தை ஏற்படுத்திய அம்மன் பேருந்தினை ஓட்டி வந்தவர் மனோகரன் என தெரிந்து கொண்டேன். பிரேத பரிசோதனைக்கு பின் எனது கணவரின் உடலை பெற்றுக் கொண்டேன்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–</u>** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சிரில் மோசஸ்** | **Caste** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**(Accused absent.Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated.26.06.2025**

**முதல் விசாரணை**

நான் கிராப்பட்டியில் வசித்து வந்து நடத்துநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். விபத்தில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் எனது மாமா ஆவார். எனது அக்கா சமயபுரம் டோல்பிளாசாவில் உள்ள தனலெட்சுமி மருத்துவக் கல்லூரியில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 01.06.2023ம் தேதி எனது மாமா எனது அக்காவை இருசக்கர வாகனத்தின் மூலம் அவர் பணிபுரியும் இடத்தில் விட்டுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக சமயபுரம்—இலால்குடி செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வாளாடி பத்மா பேலஸ் அருகில் காலை 08.30 மணியளவில் அவர் வந்த போது எதிர் திசையில் வந்த தனியார் பேருந்தானது அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது மாமா சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடைபெற்றதாக எனது அக்கா போன் மூலமாக தகவல் சொன்னார்.

சம்பவம் நடைபெறும் போது நான் வீட்டில் இருந்தேன். சம்பவம் கேள்விபட்டு இலால்குடி அரசு மருத்துவமனை சென்று எனது மாமாவை பார்த்தபோது அவருக்கு தலை, கண், கால், மார்பு ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டு இறந்திருந்தார். பிரேத பரிசோதனைக்கு பின் எனது மாமாவின் உடலை பெற்றுக் கொண்டோம். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி